செய்தி வெளியீட்டு எண் : 39 நாள்: 10.01.2022

**தமிழர் திருநாளாம், தைத்திருநாளை முன்னிட்டு, ஏழை எளிய மக்கள் புத்தாடையுடன் கொண்டாடும் வகையில் வேட்டி மற்றும் சேலைகள் வழங்கப்படுகிறது என மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி காந்தி பஜார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், பொங்கல் பண்டிகை 2022 ஆம் ஆண்டிற்கான இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தினை மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.மோகன்.இ.ஆ.ப., தலைமையில் இன்று (11.01.2022) பயனாளிகளுக்கு வழங்கி தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழகத்தில் உள்ள அனைத்து மதத்தினை சார்ந்தவர்களும் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை சிறப்பாக கொண்டாடிடும் வகையில் 2.15 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு 21 பொருட்கள் அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பினை வழங்கிட உத்தரவிட்டார்கள். மேலும், ஏழை எளிய மக்கள் புத்தாடையுடன் பொங்கல் திருநாளை கொண்டாட வேண்டும் என்கிற உயர்ந்த நோக்கத்திலும், கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கை மேம்படுத்துவதற்கும், இலவச வேட்டி, சேலைகள் வழங்கும் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள்.

அதன்படி, விழுப்புரம் மாவட்டத்தில் குடும்ப அட்டைதாரர்களுக்கு தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை புத்தாடையுடன் சிறப்பாக கொண்டாடும் வகையில் 5,73,741 சேலைகளும், 5,73,741 வேட்டிகளும் வழங்கப்படவுள்ளது. அதன் தொடக்கமாக இன்று செஞ்சி காந்தி பஜார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 2022-ஆம் ஆண்டிற்கான வேட்டி, சேலை வழங்கும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டது.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா நோய் பரவல் காலத்தில், தமிழகத்திற்கு நிதி நெருக்கடி உள்ள நிலையிலும் அனைத்து தரப்பு மக்களின் தேவைகள் அறிந்து ஒவ்வொரு திட்டங்களையும் தீட்டி செயல்படுத்தி வருகிறார்கள், ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் குடும்ப அட்டைக்கு 4 ஆயிரம் கொரோனா நிவாரண நிதி, கொரோனா நோய் தொற்றினால் இறந்தவர்களுக்கு 50 ஆயிரம் நிவாரண உதவி, ஆவின் பால் விலை குறைப்பு, பெட்ரோல் ரூ.3 விலை குறைப்பு, பெண்கள் கட்டணமில்லா பேருந்து வசதி, மகளிர் சுயஉதவிக்குழு கடன் தள்ளுபடி, "மக்களை தேடி மருத்துவம்" "இல்லம் தேடிக் கல்வி",

விவசாயிகளுக்கு ஒரு இலட்சம் மின் இணைப்பு உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள் மூலம் பலதரப்பட்ட மக்கள் பயன்பெறுகின்றனர். மேலும், இதுபோன்று பல்வேறு நலத்திட்டங்கள் தமிழ அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டங்களை எல்லாம் அனைத்து தரப்பு மக்களும் பயன்படுத்தி தங்கள் வாழ்வாதாரத்தினை உயர்த்திக் கொள்ள வேண்டும் என மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வின்போது, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) திரு.பெருமாள், திண்டிவனம் சார் ஆட்சியர் (பொ) திரு.க.ஏகாம்பரம், செஞ்சி ஒன்றிய குழு பெருந்தலைவர் திரு.விஜயகுமார் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விழுப்புரம்.